# மாந்தை மேற்கு பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 12 இல் கணக்காய்விற்காக சமரப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 11 இல் சபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மாந்தை மேற்கு பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களின் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மாந்தை மேற்கு பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்டுத்தப்பட்டிருக்கவிலை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | செலவுகள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 5,020,000 | | |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 1,205 | 01 | 25,042 |

### 1.3.3. கணககாய்விற்கான சான்றுகளின்மை

#### கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை

ரூபா 83,575,432 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 1988 இன் பிரதேச சபை நிதி விதிகள் | |
| (i) அத்தியாயம் III இன் 66 ஆம் பிரிவு | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் 65 ஆம் பிரிவு | வருமான எழுதுனரால் காலாவதியானோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனை செயலாளருக்கு சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமான மிகை ரூபா 581,140 ஆகும் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலாக வருமான மிகை ரூபா 510,464 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2011 | |
|---|---|---|---|
| | **வருமான விடயம்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** |
| | | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | குத்தகை வாடகை | 4,958 | 3,690 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 151 | 130 |
| (iii) | வேறு வருமானங்கள் | 10,472 | 10,163 |
| | மொத்தம் | 15,581 | 13,983 |

#### 2.2.2. நீதி மன்ற தண்டப்பணம்

மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 240,325 ஆகும்.

## 2.3 நோக்கங்களிற்கு முரணான நடவடிக்கைகள்

உள்ளூராட்சி ஆணையாளரின் அதிகாரம் இல்லாமல் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தின் (என்ஈஎல்எஸ்ஜபி) நடவடிக்கைகளிற்காக ரூபா 86,214 தொகையான தேனீர்ச் செலவினத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வுப் பரிசோதனை மற்றும் சபையால் பேணப்பட்ட தகவல்களின்படி ரூபா 87,586 தொகையான நட்டங்களும் சேதங்களும் வெளிப்பட்டது.

## 2.5 செயலாற்றல்

சபையினால் நிதியாண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் எதிபார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் அவற்றின் மீதான முன்னேற்றம் என்பவற்றினை மதிப்பிட முடியாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) மானியங்கள்
(ஈ) வாகனங்கள்
(உ) மீளளிக்ககூடிய வைப்புக்கள்